தரம் 1 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரையான வினாப்பத்திரங்களை இலவசமாக

PDF

வடிவில் பெற

www.e-kalvi.com

இணையத்தளத்தை அணுகவும்

# IPL

# புலமை மையம்

**மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் - 2021 / 2022**

**தொடர் கருத்தரங்கு - 11**

**வினாத்தாள் - I**

தரம் 05

**நேரம் :- 1 மணித்தியாலம்**

**சுட்டெண் : ..............................**

**ஆசிரியர் : அர்ஷாத் புஹாரி**
**0756584350, 0740769151**

**பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்**


| **பக்க இலக்கம்** | **பெற்ற புள்ளி** |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| **மொத்தம்** | |
| இறுதிப் புள்ளி | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீட்டு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும். | |


## பகுதி – I

**01, 02 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கூட்டத்திற்கு பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**


**01.** கடல், எரிபொருள், நீண்ட பயணம்


I. 


II. 

III. 


**02.** மென்மை, சுவை, சிவப்பு


I. 


II. 


III. 


**03, 04 ஆகிய வினாக்களில் உள்ள கோலத்தை அவதானித்து அடுத்து வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.**


**03.** 


I 

II. 

III 

**04.** 

I 

II 

III 

**05, 06 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள பொருத்தமற்ற சொற்கூட்டம் இடம் பெறும் விடையின் கீழ் கோடிடுக**

**05.**

| I. | II. | III. |
|---|---|---|
| மாணவன்<br>ஆசிரியர்<br>பாடசாலை | மீனவன்<br>கடற்கரை<br>படகு | அணில்<br>புறா<br>குருவி |

**06.**

| I. | II. | III. |
|---|---|---|
| ஆரணியம்<br>காடு<br>காண்டம் | உணவு<br>ஊண்<br>இரை | மன்னன்<br>அரசன்<br>கோன் |

**07, 08 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் கருத்துள்ளதாக அமைய வேண்டுமெனில் செய்ய வேண்டிய மாற்றம் எது என தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

**07.** சிறுவர்கள் மாலை வேளையில் பாடசாலையில் விளையாடினார்கள்.

I. மாலை வேளை என்பது காலை வேளை என வர வேண்டும்.

II. சிறுவர்கள் என்பது பெரியவர்கள் என வர வேண்டும்.

III. பாடசாலையில் என்பது மைதானத்தில் என வர வேண்டும்.

**08.** வண்ணத்துப் பூச்சி ரோசா மலரில் நீர் குடித்து

I. வண்ணத்துப் பூச்சி என்பது தேனீ என வர வேண்டும்

II. ரோசா மலரில் என்பது மல்லிகை மலர் என வர வேண்டும்

III. நீர் என்பதற்கு பதிலாக தேன் என வர வேண்டும்.

**09.** சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை குறைந்ததில் இருந்து கூடியது வரை ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள விடையை தெரிவு செய்க.

I. வட்டம், சதுரம், சமபக்க முக்கோணி, செவ்வகம்

II. செவ்வகம், சதுரம், சமபக்க முக்கோணி, வட்டம்

III. செவ்வகம், சமபக்க முக்கோணி, சதுரம், வட்டம்

**10.** 150m நீளமான சுவர் ஒன்றில் 10m இடைவெளியில் தூண்கள் காணப்பட்டன எனின் அச்சுவரில் காணப்படும் தூண்களின் எண்ணிக்கை யாது?


I. 16 II. 15 III. 14

**11.** W Z __ I இது ஈர்க்குத் துண்டுகளை பயன்படுத்தி செய்யப்பட்ட ஒரு கோலமாகும். எனவே இடைவெளியில் வரத்தக்க எழுத்துக்கள் எவை?

I. M T II. L T III. I V


**12, 13ம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண்கோலங்களில் வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**12.**




I. 03 II. 05 III. 01

**13.**




I. 07 II. 02 III. 12

**14.** நேற்று வெள்ளிக்கிழமையாகும் நாளை மறுதினத்திற்கும் நேற்று முன்தினத்திற்கும் உரிய நாட்கள் எவை?

I. திங்கள், வியாழன் II. வெள்ளி, ஞாயிறு III. புதன், திங்கள்

**15.** எட்டின் மடங்காகவும் ஒன்பதின் மடங்காகவும் வரக்கூடிய ஓர் எண்ணின் அரைவாசியாக இருக்கக்கூடியது எது?

I. 27 II. 36 III. 44

**16.** கவின் தனது 19வது பிறந்த தினத்தைக் கொண்டாடிய போது தேவிக்கு 13 வயதாக இருந்தது எனின் எத்தனை வருடங்களுக்கு முன்னதாக இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 26 ஆக இருந்திருக்கும்.

I. 06 II. 04 III. 03

**17.** நான்கிலக்க எண் ஒன்றில் முதல் மூன்று இலக்கங்களின் கூட்டுத்தொகையின் அரைவாசியாக நான்காம் இலக்கம் காணப்பட்டது எனின் அவ்வெண்ணாக இருக்கக் கூடியது எது?


I. 1234 II. 2535 III. 9106

**18.** ஒரு மனிதன் ஓர் இடத்தில் இருந்து புறப்பட்டு ஒரு மணித்தியாலத்தில் நடந்து 5km தூரம் சென்றான் 4 மணித்தியாலயத்தில் 5 மனிதர்கள் நடந்த தூரம் எவ்வளவு?

I. 25km II. 20km III. 100km

**19.** சைக்கிளோட்டப் போட்டி ஒன்றில் மூன்றாம் இடத்தைப் பெற்றவர் போட்டியை மு.ப. 11.55 யிற்கு நிறைவு செய்தார் இரண்டாம் இடத்திற்குரியவர் அதற்கு 25 நிமிடத்திற்கு முன்னதாகவும் முதலாவதாக வந்தவர் இரண்டாமவர் முடித்த நேரத்தை விட 25 நிமிடத்திற்கு முன்னதாகவும் நிறைவு செய்தார். எனவே முதலாவதாக போட்டியை முடித்தவர் போட்டியை நிறைவு செய்த நேரம் யாது?

I. மு.ப. 11.05 II. மு.ப. 11.15 III. மு.ப. 11.25


20. 


இவ்வரிப்படம் மூலம் மாகாணம், மாவட்டம், கிராமம் குறிக்கப்பட்டுள்ளது எனின் மாவட்டத்தை குறிக்கும் எழுத்து எது?

I. B    II. A    III. C

21. வள்ளம் - வளம் எனின் பட்டினம் ____________


I. படிம்    II. பனம்    III. பட்டி

22. 


அருகில் உள்ள அட்டையில் இருந்து பக்க நீளம் 3cm ஆக வரக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?

I. 12    II. 08    III. 09

23. செவ்வக வடிவில் மடிக்கப்பட்ட கம்பித் துண்டொன்று அதன் மடிப்புகளுக்கு ஏற்ப நேராக விரிக்கப்பட்டு மடிக்கப்பட்ட நீளத்தின் அளவுகள் கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளது.




மேலே உள்ள கம்பியானது மீண்டும் சதுர வடிவமாக மடிக்கப்பட்டால் அதன் ஒருபக்கத்தின் நீளம் யாது?

I. 9cm    II. 13cm    III. 11cm

24. ஒரு வீட்டின் கிணறு மரமொன்றிலிருந்து 10m மேற்கேயும் சுவர் மரமொன்றிலிருந்து 20m வடக்கேயும் மாடு சுவரில் இருந்து 10m மேற்கேயும் உள்ளன. இதற்கேற்ப கிணறு இருப்பது மாட்டில் இருந்து

I. 10m தெற்கில்    II. 20m தெற்கில்    III. 20m வடக்கில்

**கீழ்வரும் நிரையினை அவதானித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

| K 7 M 1 0 K V R 0 K 2 7 M U T 0 2 1 0 7 K 1 S K |
|---|

25. இங்கு அதிக தடவைகள் வந்துள்ளது எதுவாகும்.

I. 0    II. 7    III. K

**26.** இங்கு அதிக தடவைகள் வந்துள்ள எண்ணிற்கும் குறைந்த தடவை வந்துள்ள எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

I. 2 II. 0 III. 7

**கீழ்வரும் தகவலைக் கொண்டு 27, 28ம் வினாக்களுக்கு விடை தருக.**

வாகன விற்பனை நிலையமொன்றில் முச்சக்கர வண்டிகளும் மோட்டார் சைக்கிள்களுமாக 15 வாகனங்கள் காணப்பட்டன. அவற்றின் சில்லுகளை கணக்கிட்ட போது 38 ஆக காணப்பட்டது. எனின்

**27.** அங்குள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது?

I. 07 II. 08 III. 10

**28.** அங்கு காணப்படும் மோட்டார் சைக்கிள்களின் சில்லுகளின் எண்ணிக்கை யாது?

I. 16 II. 20 III. 14

**29.** ரவி, ரதி, மதி ஆகிய மூன்று பிள்ளைகள் ரூ. 1600.00 தம்மிடையே பங்கிட்டுக் கொண்டனர். ரவி பெற்ற பணம் ரதி பெற்றதை விட ரூ. 200.00 அதிகமாகும். ரதி பெற்ற பணம் மதி பெற்றதை விட ரூ. 100.00 அதிகமாகும். எனின் ரதி பெற்ற பணம் எவ்வளவு?

I. ரூபா. 700.00 II. ரூபா. 500.00 III. ரூபா. 400.00

**கீழ்வரும் பாடலை வாசித்து 30, 31ம் வினாக்களுக்கு விடை தருக.**

**ஆற்றங்கரை தனிலே – ஒரு நாள்**
**ஆறுதலாய் இருந்தேன்**
**மேற்றிசை வானத்திலே – கதிரோன்**
**விந்தை புரிய வந்தான்**


**30.** பாடலில் கூறப்பட்ட படி நான் ஆற்றங்கரைக்கு சென்ற பொழுது.




I. காலைப் பொழுது II. நண்பகல் III. மாலைப் பொழுது


**31.** மேற்றிசை என்பதனைப் பிரித்தெழுதினால் வருவது

I. மேல் + திசை II. மேற்கு + திசை III. மேற் + திசை

**32.** வெற்றிடமாக காணப்படும் பக்கத்தில் எழுத்து காணப்பட வேண்டிய முறையை தெரிவு செய்க



I. 　　II. 　　III. 

**33.** 

அருகில் உள்ள உருவில் அவதானிக்க கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கையின் இரு மடங்கு யாது?

I. 16　　II. 22　　III. 32

**34.** 2007ம் ஆண்டின் மூன்றாவது நாள் வெள்ளிக்கிழமை எனின் அவ்வருடத்தில் வரக்கூடிய புதன் கிழமைகளின் எண்ணிக்கை யாது?

I. 53　　II. 52　　III. 54

**35.** மருத்துவருக்கு நோயாளி போன்று ஆசிரியருக்கு __________

I. பாடசாலை　　II. மாணவர்　　III. கரும்பலகை

**36.** 0 தொடக்கம் 9 வரையான ஒற்றை எண்களை கூட்டும் போது கிடைக்கும் எண் தொர்பான பிழையான கூற்று யாது?

I. ஒற்றை எண் கிடைக்கும்　　II. இரட்டை எண் கிடைக்கும்

III. சதுர எண் கிடைக்கும்

**37.** எங்களூரில் உள்ள அனைவரும் அழகானவர்கள் எமது ஆசிரியரும் அழகானவர். இதன்படி எமது ஆசிரியர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பது

I. சரியானது　　II. கூறமுடியாது　　III. பிழையானது

**38.** 19ம் நூற்றாண்டின் 8ம் தசாப்தத்திற்குரிய ஆண்டாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?

I. 1875 II. 1976 III. 1879

**39.** மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி ஐந்து கால் கதிரைகள் ஆறு காணப்பட்டன எனின் அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

I. 33 II. 28 III. 32

**40.** இரு பகுதிகளும் சமனற்ற நிரையை தெரிவு செய்க.

I. A V S I S 0 1 2 5 = A V S I S 0 1 2 5

II. 2 Y 2 X 0 T 2 0 V = 2 X Z X 0 T 2 0 V

III. 5 3 1 2 7 A 3 3 4 = 5 3 1 2 7 A 3 3 4

# IPL
# புலமை மையம்

**மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் - 2021 / 2022**

**தொடர் கருத்தரங்கு - 11**

**வினாத்தாள் - II**

**தரம் 05**

நேரம் - 1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்- ..............................

**ஆசிரியர்: அர்ஷாத் புஹாரி**
**0756584350, 0740769151**

**பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன
- விடைகள் எழுதப்பட வேண்டிய இடத்தில் விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.
- 30 தொடக்கம் 59 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தர்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

## விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | புள்ளி |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்த புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |

| | ஒப்பம் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்ட தெனசான்றுப் படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரிசிலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன் | |
| **கணித பரீட்சகர்**<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன். | |
| **பிரதம பரீட்சகர்**<br>மேற்பார்வை செயவதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தேரிவிக்கின்றேன் | |

## பகுதி – II

**01. கீழ்வரும் பாடல் வரிகளைக் கொண்டு அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

நல்லார் சொல்லைக் நாம் கேட்போம்
நலமாய் வாழ வழி வகுப்போம்
தலைவர்கள் சொன்ன வழி நடப்போம்
தாய் நாட்டினையே வாழ வைப்போம்.

அறிவே வாழ்வின் முதலென்போம்
தெளிவே தெய்வ அருளென்போம்
பயமே நமக்கு பகை என்போம் - உளத்
துணிவே அதற்கு மருந்தென்போம்.

I. யார் சொன்ன வழி நடக்க வேண்டும் என பந்தியில் கூறப்பட்டுள்ளது……………….
II. நமக்கு பகையாக இருப்பது எது? …………………………………………………..
III. 'முதலென்போம்' எனும் சொல்லை பிரித்தெழுதினால் வருவது? ……………………..
IV. தைரியம் எனும் சொல்லின் ஒத்த சொல் எது? ………………………………………….
V. அருளென்போம் எனும் சொல்லின் ஒருமைச் சொல் யாது? …………………………..
VI. கலக்கம் எனும் சொல்லின் எதிர்ச் சொல் எது? …………………………………………

**(6புள்ளிகள்)**

**02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் இடைவெளிக்கு பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

I. சென்ற ஆண்டு நல்ல மழை ……………. (பெய்தது / பெய்யும்)
II. ஆசிரியர் அதிபரோடு இணைந்து ………….. (செயற்பட்டனர் / செயற்பட்டார்)
III. மனிதனுக்கு பல விலங்குகள் உதவி …………… (புரிகின்றது / புரிகின்றன)

**(3புள்ளிகள்)**

**03. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.**

I. ஓட்டை வாயன் - ………………………………………………………………………
II. இலவு காத்த கிளி - ……………………………………………………………………

**(2புள்ளிகள்)**

**04. கீழ்வரும் தொடர்களின் தனிச் சொல்லை எழுதுக.**

I. நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன் ……………………………………….
II. அனைத்து உடமைகளையும் இழந்தவன் ……………………………………………..
III. ஒரே பாடசாலையில் ஒன்றாக படித்தவர்கள் ………………………………………

**(3புள்ளிகள்)**

05. பின்வரும் சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான இரட்டைக்கிளவிகளை தெரிவு செய்க.

I. வானில் மின்னல் …………… என மின்னியது (பளபள / மினுமினு)

II. பொலிஸாரிடம் சிக்கிய திருடன் …………… வென விழித்தான் (சிடுசிடு / திருதிரு)

(2புள்ளிகள்)

06. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதி வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

I. குமரன் **குற்றவாளி** என நீதிபதி தீர்ப்பளித்தார்.

……………………………………………………………………………………

II. எமது நாட்டின் **புராதனங்களை** பாதுகாப்பது எமது கடமையாகும்.

……………………………………………………………………………………

(2புள்ளிகள்)

07. பின்வரும் வாக்கியங்களை சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் அடைப்பினுள் எழுதுக.

I. 'வந்தோம்' என்பது தன்மை பன்மை வினைச்சொல்லாகும் ( )

II. 'நீங்கள்' என்பது உயர்திணை முன்னிலை ஒருமைச் சொல்லாகும். ( )

(2புள்ளிகள்)

08. பின்வரும் சுருக்க குறியீடுகள் உணர்த்ததும் பொருளை விரித்து எழுதுக.

I. இ.பெ.கூ ……………………………………………………………………

II. தே.அ.அ ……………………………………………………………………

(2புள்ளிகள்)

09. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.

I. இட்டு / நல்லது / உண்ணு முன் / சவர்க்காரம் / உணவு / கை கழுவுவது

……………………………………………………………………………………

II. ஆட்சி / கொண்டு / காசியப்பன் / தலை நகராக / செய்தான் / சீகிரியாவை

……………………………………………………………………………………

(2புள்ளிகள்)


10. வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை எழுதுக.

I. நெல்லுக்கு அரிசி போல அவரைக்கு ……………………………………………

II. கீரிக்கு பிள்ளை போல மீனுக்கு ……………………………………………

(2புள்ளிகள்)

11. பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.

I.  ……………………

II.  ……………………

(2புள்ளிகள்)

**12. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

I. I am very Hungry ..........................................................................................

II. We are Sri Lankans ......................................................................................

(2புள்ளிகள்)

**13. பின்வருவனவற்றின் சிங்கள உச்சரிப்பை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

I. எனக்கு பால் தாருங்கள் - ........................................................................

II. உங்களுக்கு பசிக்கிறதா? - ......................................................................

(2புள்ளிகள்)

**14.** "தாத்தா வெடட்ட யனவா" எனும் வாக்கியத்தின் தமிழ் கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

..........................................................................................................

(2புள்ளிகள்)

**பின்வரும் வினாக்களுக்கான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**15.** 25050 எனும் எண்ணை சொற்களில் எழுதுக. ...............................................

**16.** கடையொன்றிலிருந்த பழங்களில் $\frac{3}{8}$ பகுதியை விற்ற பின்னர் 45 பழங்கள் எஞ்சியிருந்தன எனின் கடையில் ஆரம்பத்தில் காணப்பட்ட பழங்களின் எண்ணிக்கை யாது? ..........................................................................................

**17.** ஒரு பிள்ளைக்கு 7 பிஸ்கட்கள் வீதம் 84 பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு தேவையான பிஸ்கட்களின் எண்ணிக்கை யாது? ......................................................

**18.** A எனும் கூடையில் 3914 மணிகளும் B எனும் கூடையில் A யில் உள்ள மணிகளை விட 896 மணிகள் குறைவாகவும் காணப்பட்டன. எனின் இரு கூடைகளிலும் காணப்படும் மணிகளின் மொத்த எண்ணிக்கை யாது? ...................................

**19.**



6cm

அருகில் உள்ள சதுரவடிவான கூண்டு இரும்புக் கம்பியால் ஆக்கப்பட்டுள்ளது. அக்கம்பியை விரித்து ஒரு முக்கோணமாக மடிக்கப்பட்டது எனின் அம்முக்கோணியின் ஒரு பக்க நீளம் யாது? ...................................................................

**20. வெற்றிடங்களை நிரப்புக.**


I.
```
    6kg   395g
  + 8kg   680g
  ____________

  ____________
```

II.
```
   16kg    32g
  - 6kg   896g
  ____________

  ____________
```

**21.** பாடசாலைக் கலை விழா 4 மணித்தியாலம் 35 நிமிடங்கள் நடைபெற்று பி.ப. 2.15 யிற்கு முடிவடைந்தது எனின் கலை விழா ஆரம்பித்த நேரத்தை 24 மணித்தியால கடிகார முறையில் எழுதுக. ..............................................................................

**22.** 

அருகில் உள்ள உருவில் காணப்படும் நாற்பக்கல்களின் எண்ணிக்கை யாது? ..............................................................

**23.** ரவியின் வயது 11 வருடங்களும் 6 மாதங்களும் ஆகும். பாலாவின் வயது 9 வருடங்களும் 9 மாதங்களும் ஆகும். எனின் இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை யாது? ..............................................................................................


**24.**

| | | |
|---|---|---|
| 40 | 56 | 49 |
| 64 | 96 | 65 |

அடைப்பில் உள்ள எண்களின் 4யின் மடங்கான எண்களை எழுதுக. ..............................................................................

**25.** தாங்கியொன்றில் 6100*l* நீர் காணப்பட்டது. தாங்கியிலிருந்து 4855*l* 695*ml* நீர் வெளியேற்றப்பட்டால் எஞ்சிய நீரின் அளவு யாது? ..............................................

**26.** கவிதா தன்னிடம் இருந்த 500.00 ரூபா பணத்தில் 60.00 ரூபா பெறுமதியான 3 புத்தகங்களும் 18.00 ரூபா பெறுமதியான 6 பேனைகளையும் வாங்கினாள் எனின் அவளிடம் மீதியாக காணப்படும் பணம் எவ்வளவு? ..............................................

**27.** 

அருகில் உள்ள திண்மத்தின்

I. உச்சியின் எண்ணிக்கை யாது? ..............................................

II. விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..............................................

**ஆரம்பப் பாடசாலையில் தரம் 1 – 5 வரையான வகுப்புக்களில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.**

| தரம் | பிள்ளைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| 1 | 33 | 29 |
| 2 | 16 | 25 |
| 3 | 41 | 37 |
| 4 | 28 | 21 |
| 5 | 25 | 25 |

**28.** அதிகமான மாணவர்கள் காணப்படும் தரம் எது?

..............................................................................

**29.** எந்த வகுப்பின் மாணவர்களின் எண்ணிக்கை தரம் 3 ஆண் மாணவர்களின் எண்ணிக்கைக்கு சமனாகும்?

..............................................................................

**(15 x 2 = 30 புள்ளிகள்)**

**30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

**30.** இரவில் பூக்கும் மலர் வகை எது?

I. சூரியகாந்தி II. தாமரை III. பவள மல்லிகை

**31.** உடலுக்கு சக்தியை தரும் உணவு எது?

I. கடலை II. ஈரப்பலா III. கருவாடு

**32.** பின்வரும் எப்பாத்திரத்தில் சமைக்கும் போது புளியை சேர்க்கக் கூடாது

I. கண்ணாடிப் பாத்திரம் II. அலுமினியப் பாத்திரம் III. களிமண் பாத்திரம்

**33.** வெடித்தல் மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட தாவரம் எது?

I. குன்றி மணி II. தென்னை III. காசித்தும்மை

**34.** செயற்கையான நிறப்பொருள், சுவையூட்டிகள் என்பவற்றை உண்பதனால் ஏற்படும் நோய் எது?

I. நீரிழிவு II. வயிற்றோட்டம் III. புற்றுநோய்

**35.** பின்வருவனவற்றுள் எது உலக மரபுரிமைப் பட்டியலில் உள்ளடங்காதது

I. சிங்கராச வனம் II. வில்பத்து சரணாலயம் III. காலிக்கோட்டை

**36.** 'செக்கு' பயன்படுத்தப்படும் தொழில் எது?

I. விவசாயம் II. எண்ணெய் பிழிதல் III. வனைதற் தொழில்

**37.** மிகச்சிறிய வித்தை உடைய தாவரம் எது

I. மிளகு II. பயறு III. பயிற்றை

**38.** புராணகம எனும் பண்டைய மாதிரிக் கிராமம் காணப்படும் மாவட்டம் எது

I. பொலநறுவை II. இரத்தினபுரி III. அநுராதபுரம்

**39.**  படத்தில் காணப்படுபவரின் பெயர் யாது?

I. டி.பி. ஜயா II. பதியுதீன் மஹ்மூத் III. எம்.சி. சித்திலெப்பை

**40.** விவாகப் பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்றைப் பெறுவதற்காக செல்ல வேண்டிய நிறுவனம்

I. பிரதேச செயலகம் II. மாவட்ட செயலகம் III. பிரதேச சபை

**41.** மேற்பரப்பில் ஒட்டி இருப்பதற்கு ஏதுவான பாதங்களைக் கொண்ட பிராணி எது?

I. முதலை II. பல்லி III. அட்டை

**42.** முற்காலத்தில் அரிசியை இடித்து மாவாக்குவதற்கு பயன்படுத்திய உபகரணம் எது?

I. அம்மி II. திருகைக்கல் III. உரல் - உலக்கை

**43.** புரதம் அதிகம் அடங்கியுள்ள உணவுகள் எவை?

I. இறைச்சி, மரவள்ளி　　II. சோயா, இறைச்சி　　III. மீன், பலாக்காய்

**44.** அதிகளவான பொருட்சேதத்தை ஏற்படுத்தக் கூடிய விபத்து எது?

I. வாகன விபத்து　　II. சுனாமி　　III. மின்சார தாக்குதல்

**45.** பின்வருவனவற்றுள் தொற்றாத நோய் எது?

I. கொரோனா　　II. டெங்கு　　III. புற்றுநோய்

**46.** பருகுவதற்கு மிகவும் உகந்த நீர் எது?

I. கொதித்தாறிய நீர்　　II. வடிகட்டிய நீர்　　III. குளிர் நீர்

**47.**  உருவில் உள்ள வேலையை செய்வதற்கு பயன்படும் எளிய பொறி எது?

I. சாய்தளம்　　II. கப்பி　　III. சில்லு


**48.** சட்டக்காந்தம் ஒன்றின் வடமுனை எந்த நிறத்தால் குறிக்கப்பட்டிருக்கும்.

I. சிவப்பு　　II. மஞ்சள்　　III. பச்சை

**49.** வித்துக்களை நீரில் ஊறவைத்து பாத்திகளில் நடுவதன் நோக்கம்

I. நடுகையை இலகுவாக்க　　II. விளைச்சலை அதிகரிக்க

III. முளைதிறனை விரைவு படுத்த

**50.**  அருகில் உள்ள மஞ்சள் நிற பிண்ணனியுடனான உரு குறித்து நிற்பது

I. பஸ் தரிப்பிடம்　　II. முன்னால் பஸ் தரிப்பிடம்　　III.வாகனம் நிறுத்தத்தடை

**51.** இலங்கையில் பெருந்தெருக்களை குறிக்க பயன்படும் நிறம் எது?

I. ஊதா　　II. சிவப்பு　　III. மஞ்சள்

**52.** இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமையப் பெற்றுள்ள இடம் எது?

I. மத்தள　　II. யாழ்ப்பாணம்　　III. கட்டுநாயக்க

**53.** ஊறுகாய் இட்டு நீண்டகாலம் பாதுகாக்கப்படும் உணவு

I. கிழங்கு　　II. எலுமிச்சம் பழம்　　III. தோடம்பழம்

**54.** தென் மாகாணத்தில் கடலுடன் கலக்கும் இரு நதிகளும் எவை?

I. நில்வள கங்கை - வளவ கங்கை　　II. களனி கங்கை – களு கங்கை

III. நில்வள கங்கை – களு கங்கை

**55.** இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்கு மழை கிடைக்கும் பருவக்காற்று

I. தென்மேல் பருவக்காற்று　　II. வடகீழ் பருவக்காற்று　　III. உகைப்பு மழை

**56.** உலகில் உள்ள சமுத்திரங்களில் பெரிய சமுத்திரம் எது?

I. பசுபிக் சமுத்திரம் II. அத்திலாந்திக் சமுத்திரம் III. இந்து சமுத்திரம்

**57.** வானில் சந்திரனை முழுமையாக அவதானிக்க கூடிய நாள் எது?

I. அமாவாசை II. பௌர்ணமி III. தேய்பிறை

**58.** உணவுக் கழிவுகளை இடக்கூடிய குப்பைத் தொட்டியின் நிறம் யாது?

I. சிவப்பு II. பச்சை III. நீலம்

**59.** அவசர அம்பியுலன்ஸ் சேவைக்காக அழைக்க வேண்டிய இலக்கம் எது?

I. 1990 II. 1919 III. 1948

**(30x1 = 30புள்ளிகள்)**

**60.** "நீண்ட நாட்களாக மூடப்பட்டிருந்த பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதும் முதல் நாள் நான் பாடசாலைக்கு சென்றேன்." இதனைத் தொடர்ந்து 03 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 05 சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

**(06 புள்ளிகள்)**